# ஜுபிடர்

தயாரிப்பு



JUPITER PICTURES CIRCUIT

# ராணி

1½ அணா

## ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த

# " ராணி "

| | | |
|---|---|---|
| பாட்டு இயற்றியவர்கள் | .. | உடுமலை நாராயண கவி,<br>சுந்தர வாத்தியார்,<br>K. D. சந்தானம்,<br>கு. சா. கிருஷ்ணமூர்த்தி. |
| சங்கீதம் | .. | C. R. சுப்பராமன். |
| நடன அமைப்பு | .. | வேதாந்தம் ராகவய்யா,<br>ஹீராலால். |

## தயாரிப்பு: M. சோமசுந்தரம்

| | | |
|---|---|---|
| ப்ரொடக்ஷன்<br>எக்ஸிகியூடிவ்ஸ். | .. | C. சுந்தரம்,<br>S. சம்பத். |

## டைரெக்ஷன்: பிரசாத்

| | | |
|---|---|---|
| உதவி | .. | C. சீனிவாசன்,<br>K. S. சேதுமாதவன், B.Sc. |
| ஸ்டூடியோ | .. | தி சென்ட்ரல் ஸ்டூடியோஸ் லிமிடெட், கோயமுத்தூர், லெஸ்ஸீஸ் — ஜூபிடர் பிக்சர்ஸ் &<br>நெப்ட்டியூன் ஸ்டூடியோஸ் லிமிடெட், அடையார், சென்னை. |
| ஒலிப்பதிவு | .. | W. R. சுப்பராவ். |
| உதவி | .. | G. K. ராமு,<br>P. வெங்கடாசலம்,<br>முல்லா,<br>மதுசூதன்,<br>C. R. சீதாபதி. |
| ஒலிப்பதிவு | .. | M. D. ராஜாராம். |
| உதவி | .. | கோவிந்தன் நாயர்,<br>N. சுப்பராவ்,<br>N. பழனியப்பன். |
| ஒலிப்பதிவு, பாட்டும், பின்னணி சங்கீதமும். | | A. கோவிந்தசாமி. |
| உதவி | .. | S. விஸ்வநாதன்,<br>P. S. நரசிம்மன். |

| | |
|---|---|
| லாபரெட்டரி .. | ஜூபிடர் லாபரெட்டரீஸ்,<br>அடயார், சென்னை. |
| எடிட்டிங் .. | M. A. திருமுகம். |
| உதவி .. | T. விஜயரங்கம்,<br>E. V. ஷண்முகம்,<br>V. ராஜகோபால். |
| ஸ்டில .. | R. நாகராஜ ராவ்,<br>K. அனநதன். |

**ஆர்ட் டைரெக்ஷன்: A. K. சேகர்**

| | |
|---|---|
| செட்டிங்ஸ் .. | P. P. சௌத்திரி,<br>M. P. குட்டியப்பு. |
| ஆடிஸ்டுகள .. | V. S. ராவ்,<br>A. K. பொன்னுசாமி. |
| மேககப .. | சங்கர் ராவ் நிப்பாதகர்,<br>K. R. ராகவ்,<br>A. V. ராமச்சந்திரன். |
| உதவி .. | S. R. சுடலை,<br>M. ராமசாமி,<br>M. கஜபதி. |
| உடைகள .. | T. A. மோதி. |
| உதவி .. | T. A. மாதவன,<br>C. K. ஹரி. |
| பரொடகஷன் மானேஜர் (ஸ்டுடியோ) .. | K. அநதபபன. |

Produced & Processed

At

THE CENTRAL STUDIOS LIMITED, COIMBATORE

*Lessees:* JUPITER PICTURES

&

THE NEPTUNE STUDIOS LIMITED, ADYAR, MADRAS.

Recorded on

R.C.A.

Sound System.

# " ரா ணி "

| | | |
|---|---|---|
| P. பானுமதி | .. .. .. | ராணி. |
| S. பாலசந்தர் | .. .. .. | விஜயன. |
| ராஜா வஹாப் காஷ்மீரி | .. .. | பீமன. |
| S. V. சுப்பையா | .. .. .. | அரசன. |
| M. K. முஸ்தாபா | .. .. .. | திவான. |
| G. M. பஷீர் | .. .. .. | சேனுதிபதி. |
| C. S. D. சிங் | .. .. .. | கர்ணுசிங. |
| K. N. வெங்கட்ராமன் | .. .. | வேலையாள். |
| M. R. சந்தானம் | .. .. .. | ராஜகுரு. |
| தேஷ்ராஜ் | .. .. .. | ஆபீஸர். |
| பீர் முகம்மது | .. .. .. | ஜிப்ஸி தலைவன். |
| லக்ஷ்மி ப்ரபா | .. .. .. | பாலா. |
| M. S. S. பாககியம் | .. .. .. | சொக்கம்மா. |
| அங்கமுத்து | .. .. .. | அஙகா. |
| M. சரோஜா | .. .. .. | ஜிப்ஸி பெண. |
| பேபி சரஸ்வதி | .. .. .. | குழந்தை ராணி. |

மற்றும் ஜூபிடர் நடிக, நடிகைகள்.

நடனம் .. { C. R. ராஜகுமாரி,
பொள்ளாச்சி கமலா.

# "ராணி"

## கதைச் சுருக்கம்

மங்களபுரி அரசன புதல்வி "ரஞ்சனி" யிடம் பாசததால கட்டுண்டவன. அனறு ரஞ்சனிககு அரசாஙக முத்திரை பொறிக கும் நாள. பரம்பரை வழக்கம் அது. சிறுமி வேதனையை மறகக எததனையோ களியாட்டஙகள . . . . இனிது முடிநதது விழா.

இரவு—பணிப் பெண்கள தாலாட்ட, அரசன் தொட்டி லாட்ட கண அயர்நதாள் ரஞ்சனி. முததிரை பொறிக்கும் கூட்டததில் ஒருவன பீமன். பயஙகரமான மனித மிருகம். அவன் கண் ரஞ்சனி மீது விழுந்தது. நடுநிசி. இளவரசியை கவாநது சென்றுன தன மனைவி பாலாவின உதவியுடன.

தன பிறவியைப் பற்றி உண்மையறியாமல் இளவரசி "ராணி" யாக பல வருடங்கள் பீமனிடம் வளர்ந்தாள அடுத்த நாட்டிலே அற்புத அழகியாய் வாலிபர்களின் உள்ளஙகளிலே ஓர் பொறபதுமை போல.

புத்திர வாஞ்சை. அரசனின புததி பேதலித்தது. நாட்டி லுள்ள யுவதிகளை ஒருவர்பின் ஒருவராக ஒருநாள் "ராணி" யாக்கி, மறுநாள் தூககிலிடுவதை வழக்கமாகக கொண்டான.

ராணி வளர்நத நாட்டிலே தளபதி கர்ஜுசிங்கிடம் போர் பயிற்சி பெற வந்தவன விஜயன். ராணியைச சந்திததான். அவள நாடோடிப் பெண் என அறிந்தான். ஆனாலும் அவன் உள்ளததிலே இடம் பெற்றுள. அவள் தெருவிலே வியாபாரம செயது கிடைககும பணத்தால் தன கூட்டத்தினரைக் காப பாறறுவது வழக்கம்.

அன்று தளபதி வீட்டின முன் வியாபாரம் நடந்தது. கூட்டம் கூடியது. அங்கு சத்தம் போடக் கூடாதென்பது தள பதியின வேலைக்காரி அங்காவின் கட்டளை. மீறினுள ராணி. இருவருக்கும் வாக்குவாதம் முற்றி சண்டை மூண்டது. முடி வில் ராணி சிப்பாய் விஜயனால் அதிகாரியிடம் கொண்டு செலலப் படும்போது தப்பிச் சென்றுள். கடமை தவறிய குற்றத்திற்கு விஜயன் தண்டிக்கப்பட்டான்.

தன் சாகசத்தால் தளபதியை ஏமாற்றி நடனத்தால் சேனாதிபதியை மயக்கி தன் காதலனை விடுவித்தாள் ராணி. ராணியின் போக்கிலே வெறுப்புற்றான பீமன்.

தான் ஒரு நாடோடிப் பெண்ணால் ஏமாற்றப்பட்டதை அறிந்து கோபங்கொண்ட தளபதி அவளைக் கைது செய்ய நாடோடி வட்டாரத்தினுள் புகுந்தான். அங்கே விஜயனும்—ராணியும். தளபதி அவளைக் கைது செய்ய முயன்றபோது விஜயனுக்கும் தளபதிக்கும் சண்டை மூண்டது. சமயம் பார்த்து விஜயனை ஒழிக்க எண்ணிய பீமனால் கொலை செய்யப் பட்டான் தளபதி. அதோடு அக்குற்றத்தையும் விஜயன் மீது சுமத்தினான—பாலா பதறினாள்—அவளை அடக்கினான் பீமன். தப்பிச் சென்றனர் விஜயன், ராணி, அவள் தோழி சொக்கம்மா மூவரும். விஜயனைக் கண்டு பிடிப்பவர்கட்கு 5,000ம் வெள்ளி நாணயங்கள் வெகுமதியளிப்பதாக அறிவிக்கப்பட்டது. சிப் பாய்கள் தேடி அலைந்தனர். பீமன் முயற்சியால் கண்டுபிடிக் கப்பட்டான் விஜயன். அவனுக்கும் சிப்பாய்களுக்கும் சண்டை மூண்டது. முடிவில் வீரர்கள் துரத்தப்பட்டு தன் இடத்திற்கு வந்தான் விஜே. அங்கு பீமனை ஏமாற்ற ராணி கூறிய வார்த்தைகளை கேட்டு ராணியின் மீது தப்பு அபிப்பிராயங் கொண்டு அவளை அடித்துத் துரத்தினான. தப்பியோடிய சிப் பாய்களுடன் திரும்பி வந்த பீமனால விஜயன் பிடித்துச் செல்லப்பட்டு நடுத்தெருவில கட்டி வைக்கப்பட்டான். விஜயன் மீது ஏற்பட்ட கோபத்திலே ராணி மஙகளபுரி எல்லை வரை சென்றாள். அந்த அரசாங்க சிப்பாய்கள் அவளை "ஒருநாள் ராணி" யாகும்படி வருந்தியழைத்தார்கள். அவளுக்கு விஜ யனைப் பற்றிய நினைவு வர, எங்கே அவன் தேடித் திரியும் சிப்பாய்களிடம் அகப்பட்டு விடுவானோ எனற பயத்தில் அவனைக் காப்பாற்ற ஓடி வந்தாள். தன் இடம் சேர்நததும் விஜயனின் கதியை சொக்கம்மாள் சொல்லக் கேட்டாள். மனந் துடித்தாள். அவனைக் காப்பாற்ற தன் கூட்டத்தின உதவியை நாடினாள். விஜயனின் தொடர்பால் தங்களை விட்டுப் பிரிந்து சென்ற அவள் மீது ஆத்திரங்கொண்டு கூட்டத்தார் அடித்தனர். துடித்தாள ராணி. பீமன் அவளைக் காப்பாற்றி தன் மிருக இச்சைக்கு பலியாக்க முயன்றான். குறுக்கிட்டாள் பாலா. அவளை கொலை செய்தான் பீமன். மறைந்து நின்ற ராணி அவளைக் காப்பாற்ற முயனறாள். இறக்கும் தருவாயில் தளபதியின

கொலை ரகசியத்தை அவளிடம் வெளியிட்டாள். விஜயன் நிரபராதி என அறிநத ராணி சேனாதிபதியிடம் ஓடினாள். அவர் சாட்சியம் கேட்டார். ஒரே சாட்சியான பாலா இறந்துவிட்டாள். தனக்காக தன் காதலன் தூக்கிலே தொங்கப் போகிறான், தான வாழ்வதற்கு எதற்கு ? யாருக்காக ? சிந்தித்தாள் . . . . மஙகளபுரியின "ஒரு நாள் ராணி" பதவி அவள் நினைவுக்கு வந்தது. ஓடினாள். ஒரு நாள ராணி மறுநாள் தூககிலிடப்படு வாள என அறிந்தாள். எனறாலும், தன் காதலனுக்காகத் தன்னைத் தியாகம் செய்து ராணியானாள்.

அவள உத்தரவுப்படி, பீமனும், விஜயனும் கொணடு வநது நிறுத்தபபட்டார்கள். விஜயனை மீட்டுச் செல்ல வந்த அடுத்த நாட்டு அதிகாரிகளின் முனனிலையில், அவள் சாகசத தில் மயங்கிய பீமன தன பெருமையை வெளியிடுவதாக எண்ணி கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டான். விஜே விடுதலை செய்யப்பட்டான. இவ்வளவும் தனனைக் காப்பாற்றுவ தற்காகவே என்பதை அறியாத விஜயன் ராணியின் நடத்தை யில் சந்தேகித்து அவ்ளை விஷம்போல வெறுத்தான். அதே சிறைக்குக் கொண்டு வரப்பட்ட பீமனால் ராணியின் உயிரைக காப்பாறறும் ரகசியம் ஒன்று இருப்பதாக விஜே அறிந்தான். எனினும் அவளைப்பற்றி அவன் ஏன் கவலைப்பட வேண்டும் ? ராணியின் பதவிககாலம முடிந்தது. தூககுக கயிற்று வட்டம் அவள் கழுத்தை இறுக்கத தயாராய் இருநதது. எங்கும் ஒரே கூட்டம். அதில் விஜயனும் ஒருவன். தன்னை வஞ்சித்த அவள் உயிர் பிரிவதை பார்க்கும் ஆனநததிலே அவன் . . . . .

தன தோழியைக காப்பாறற வழியறியாது துடித்த சொக் கமமாள் விஜயனைப் பார்த்து அவனிடம ஓடி வந்தாள. அவள் மூலம் உண்மையை அறிந்த அவன பீமனிடம் இருக்கும ரகசியத்தை அறிவதற்கு ஓடினான். அவனைச் சந்தித்தான். இருவருககும் பலத்த சண்டை மூணடது.

ராணியின் கழுத்திலே தூககுக கயிறு. விஜயனின் கழுத்தை நோக்கி பீமனின கட்டாரி. பின்னர் நடந்த தென்ன ? . . . . . . . .

# "ராணி"

**இயற்றியது :—ஸ்ரீ. கு. சா. கிருஷ்ணமூர்த்தி.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீமதி ஜிக்கி பார்ட்டி.**

*மாமலா தூவிட வாரீர் — குல*

*மாமணி நீயே வாழி — யென* **(மாமலர்)**

*வான் எழில் சோ சுடர் போல*
*வாழக வென்றே — வாழததுவோம் — நாமே இன்றே*
*மனமும் மகிழ் வோமே —* **(குல மாமணி)**

*மாதவமே மகவாய் வாழ்நததாலே*
*வாழ்வின் நலம் யாவும் — நிறைந்தே*
*வளமும் பெற வேண்டும்—* **(குல மாமணி)**

---

**இயற்றியது :—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
**சங்கீதம் :—ஸ்ரீ. டி. ஸி. டட்.**
**பாடியது :—ஸ்ரீமதி ஜிக்கி, கோஷ்டியார்.**

*தாலோ தாலே தாலோ*

*தாலேலோ தண மேவும நிலாவில்*
*தாலே தாலோ.*
*நீலக கண்களே இமைகள தழுவ*
*நேர்த்தியாய் தாலேலோ*
*பாலே லண்ணும் நினைவால விரலே*
*பவள வாய ருசி பாாகக—தாலே தாலோ.*

*தாலோ தாலே தாலோ.*

*தாலோ மகிழ்வாய்க காணும் கனவில்*
*தாலோ தாலே தாலோ —*

*வானில தவழும மதியும மறைநதே*
*மோன மையிருள சூழ*
*காணும் உலகே இருளமயமாச்சே*
*கலே மதி மீண்டும் வராதோ —தாலே தாலோ—*
*தாலேலோ மணம வீசும் ரோஜாவே.*

*தாலோ தாலே தாலோ.*

**இயற்றியது :—ஸ்ரீ. கு. சா. கிருஷ்ணமூர்த்தி.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீ. எஸ். பாலசந்தர்.**
**ஸ்ரீமதி ஜிக்கி, கோஷ்டி.**

**வழி நடை பாட்டு.**

*போராடும் வன்மை பெற்று*
*வெற்றிச் சங்கம் ஊதுவோம்*
*சீரோடு வாரீா நாட்டின்*
*சேவை செய்வோம் நாம்.*
*மாறாத அன்பு கொணடு முன்னேறுவோம்*
*மாதாவின வெறறி கண்டு இனபம் காண்போம்.*

*நம் கரததில வாள் எடுத்துப் போர்ப்*
*பயிற்சி பெறுவோம.*
*பார் மீதிலே நமககு யாரிணை*
*ஆர்வமோடு நாம் விரைந்து*
*நா நிலத்தினிலே*
*யார் எதிர்த்திடினும்*
*நாம் ஜெயம் பெறுவோம்.*

*மான் விழிக் கணைகள கொண்டே*
*ஆளுவோம ஜெகத்தை இன்றே*
*தேன் போல் கீத மழையே பொழிவோம்*
*தினமே மனம் போல் ஆடுவோம.* (மான்விழி)

---

**இயற்றியது :—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீ. லோகநாதன்.**
**ஸ்ரீமதி பீ. லீலா, கோஷ்டியார்.**

**கோரஸ் :** *உள்ளே ஒண்ணு வெளியே ஒண்ணு*
*உலகம் இதுதாங்க*
*உண்மை பொய்யும் ரெண்டும் கலந்த*
*உலகம் இதுதாங்க.*

**தொகையறு.**

**ஆண் :** *நைசான பீடா நல்ல நைசான பீடா*
*ஆறு பைசா தானுங்க அதிகமில்லிங்க*

**பாட்டு.**

*நைசான பீடா நைசான பீடா* (நை)
*ஆறு பைசா தானுங்க அதிகமில்லிங்க* (ஆறு)

*நைசான*

**வசனம் :** வாங்கம்மா வாங்கையா
பீடா வேணுங்களா ?

**பாட்டு.**

ஐசா லக்டி ஏலம் கிறும்பு எல்லாஞ் சேர்த்து
செஞ்சதுங்க
ஐயா வாங்கி வாயிலே போட்டா

**வசனம் :** அம்மா வாயும் செவக்கும் பாருங்க.

**பாட்டு.**

நைசான பீடா நைசான பீடா
நாட்டு வெத்திலே பீடா போட்டா
நல்லா இல்லிங்களாம் அம்மாளுக்கு
நல்லா இல்லிங்களாம் மே
நாட்டுச் சாயத்தை உதட்டில் பூசின
நாகரீகங்களாம்
உருவமோ சுதேசி
உள்ளமோ விதேசி

**வசனம் :** பாத்தீங்களா ?
உலகம் இதுதாங்க !

**ஆண் :** மலை வாழைப்பழம் சாத்துக்குடி ஆரஞ்சி
மலைப்பழம்

**பாட்டு.**

மல்கோவாவுடன் நீலங் குண்டு
சல்லீசான விலைக்கு உண்டு
மலைப்பழம் சிறு மலைப்பழம்
குலையோடே கொடிமுந்திரிப் பழம்
கொம்புத் தேன் போல் தித்திக்கும்
மலைப்பழம் சிறு மலைப்பழம்.

சாத்துக்குடி ஆரஞ்சி விலை
சரசந்தான் நாலணுவுக்கஞ்சி
பார்த்தால் இனிக்கும் காஷ்மீர் ஆப்பிள் பழமும்
திராட்சைப் பழமும் இருக்கிது
மலைப்பழம் சிறு மலைப்பழம்.

**ஒரு பையன் :** ஏ..............பழம்............

**பழ வியாபாரி :** ஏம்ப்பா............ ?

**பையன் :** எப்படி........?

**வியாபாரி :** அணுவுக்கு....ஒண்ணு....

**பையன் :** என்ன அநியாயம், ரெண்டில்லையா.... ?

**வியாபாரி :** போடா....மண்டு....

**பையன் :** ஹே............

**வியாபாரி :** என்ன ஹே........
டே......டே.......
திருட்டுப் பய புள்ளே........
பையென பாத்தா சிறுசு
செய்யிற காரியமோ பெரிசு
பாத்திங்களா ?
உலகம் இதுதாங்க !

**கோரஸ் :** உணமை பொய்யும் ரெண்டும் கலந்த
உலகம் இதுதாஙக........

**ராணி :**(பாட்டு) உள்ளே ஒண்ணு வெளியே ஒண்ணு
உலகம் இதுதாங்க
உண்மை பொய்யும் ரெண்டும் கலந்த
உலகம் இதுதாங்க.

---

***இயற்றியது :*—ஸ்ரீ. நாராயணகவி.**
***சங்கீதம் :*—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
***பாடியது :*—ஸ்ரீமதி பானுமதி, பார்ட்டி.**

**ராணி :** சமரசம் நிலே பெறும்
தவழும் மென் மேலே
சரசமெனும் வழியால
சுகமே நாமே காணும் (சம)

**விஜயன் :** இமையிடை விழி பேசும
மொழிதான் எதுவோ திரு
எழில் சேர் மானே நீயதை
இனிது சொல்லாயோ.

**ராணி :** சொலலும் கார்யமல்ல.

**விஜயன் :** இங்கு யாருமில்லே.

**ராணி :** நமதொரு நேசம் அதுதான்.

**விஜயன் :** .......... அறிவேனே.

**இருவரும் :** நவமென வரும இகவாழ்வினில்
நடைபெறும் செயலாலே.... (சம)

**ராணி :** உளமதில் இது நாள்
ஒரு புதுமை கண்டேனே.

**விஜயன் :** ........அதற்
குவமையும் யாதோ
சொல்லலாமோ
இந்த நேரம்

**ராணி :** உயிர் போலும் ஆசையுள்ள
பொருள் தான் யாது

**விஜயன் :** உறவாடும் நீயல்லால்
இனி வேறேது.

**ராணி :** அது நீரே!

**விஜயன் :** இணை நீயே!

**இருவரும் :** கனிவுரும் இரு மன மொன்ருக
துணை பெறும் முறையாலே. (சமரசம்)

---

**இயற்றியது :—ஸ்ரீ. நாராயணகவி.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீமதி பானுமதி.**

சீப்பு..........
சினுக்கணி..........
சிமிளி..........

சீபபு சிமிளி பொம்மைகள்
சில்லரைச் சாமான்
காப்பு வளையல் கண்ணுடி
வாய்யா........வாம்மா....

கைத்தடி பொத்தாங்
கடஞ் சொல்லாமே
காசைக் கொடுத்தாக்
கிடைக்கும்.

வாங்க........வாங்க........
வாங்க....வாங்க.......
சாமானைப் பாருங்க விலே
சரசந்தானுங்க................ (சா)

இதில்
ஏமாற்றம் இல்லீங்க
எடுத்துப் பாருங்க
இதை (யெ)
அதை (யெ)

நீங்க
ஏழை மக்களை வாழ வைத்திட
எடுங்க பணத்தைக்
கொடுங்க.......... (சா)

**ஒரு ஆள் :** அந்த சீப்பெடம்மா!

**ராணி :** அது காப்பணம.

| | |
|---|---|
| வேறு ஆள் : | அந்த சிமிளியெடம்மா ! |
| ராணி : | அது அரைப்பணம். |
| சிறு பையன் : | அம்மா ! எனக்கு பீப்பி |
| ராணி : | அய்யோ. |
| தாயார் : | அதை யெடம்மா.<br>வெலை. |
| ராணி : | காப்பணம். |
| வேறு பெண் : | இதெல்லாம்........ |
| ராணி : | காப்பணம் இது அரைப்பணம்<br>அது முக்காப் பணம்<br>முழுப் பணம்<br>பூப்போட்ட பாக்கு வெத்திலே<br>பொட்டி கிட்டி லொட்டு<br>லொசுக்கு.......... .. (சா) |
| வசனம் : | ஏய்யா என்ன முகம்<br>ஒரு மாதிரியா இருக்கு.<br>வீட்லெ ஏதாவது<br>சண்டையா அப்படின்னு<br>இந்தாங்க. |
| பாட்டு : | இது அம்மி அரைக்கிற<br>அம்மாக் கைக்கிது<br>அழகான வளையல் வளையல்<br>கும்மியடிக்கிற அம்மணி போட்டு<br>குனிஞ்சா நிமிந்தா<br>குலுங்கும் வளையல்........ (அ) |
| வசனம் : | புருசெங் கூட சண்டை போடுற<br>பொம்பிளை கையிலே போட்டா<br>அம்மா வீட்டுக்குப் போகமாட்டா<br>அக்கம் பக்கம் பேசமாட்டா<br>அன்பே கண்ணாளா என்னுங்க<br>அடிக்கடி நீங்க வெளியே கிளியே<br>போறது வாரது நல்லா இல்லீங்க<br>அப்படின்னு<br>கல கல கல வெனக்<br>கை வளை குலுங்க<br>கட்டிப் புடிச்சுக்குவா இப்படி<br>வேணுமா....... (அம்) |
| கிழவன் : | அந்தப் பொம்மை யெடம்மா |
| ராணி : | யாருக்கய்யா பொம்மை |

**கிழவன் :** இந்தக் குழந்தைக்கு

**ராணி :** ஆளைப்பாரு ஆளை
ஆச்சாம் வயசு
அறுபதுக்கும் மேலே

**ராணி** அடே
காமனும் ரதியும் இதில்
காதல் செயயும் மாதிரியாய்
கற்பனையாய்ச் சேருசு வச்ச
பொம்மை மொம்மை
இதைப
பூமியிலே சினனஞ சிறு
புளளைஙகளேப பாகக
விடடா
புத்தி கெட்டுப போகிறதும்
உணமைம உணமை
சுய (புத்தி)

இந்தா
புத்தகம் படிக்கிறுபபுலே
சிததரங கொடு
புண்ணியவான் புததா போலே
பொமமையைக கொடு
இந்தாய்யா வாஙகிக்கோ
ஆமா.
போறு வராதுஙகோ
புதுப் புதுச் சாமான்
இந்த................ (சா)

---

**ராணி :** வாங்க வாங்க
காசைக் கொடுத்து
வாஙகிக்க இப்படி
கையிலே வசசுககோ
கடல கரையோரம
மைனர் மாதிரி
நடராஜா நடராஜா
இதைக்
கையில் பிடிச்சுக்
காலையும் மாலையும்
நடராஜா நடராஜா
இரு
கண்ணைக் கட்டிக் கொண்டு
நீயும் நடராஜா.
இப்படி நடராஜா.

இப்படி நடராஜா
நடகக முடியா கிழவனைக் கூட
நடராஜன் போலாககும்
கடிக்கும் நாயை விரட்டும்
போக்கிரி.
கள்ளன் வநதால தாக்கும்
படிக்காத ஆளைக கூடப்
பண்டிதனாகக் காட்டும்
பாவிப பயலை மனுசம் மாதிரி
பஞ்சை தனனையும் ராஜா மாதிரி
காட்டும் நடை கூட்டும்
வழி காட்டும். (நடராஜா)

---

**இயற்றியது :—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீமதி பானுமதி.**

நானே ஞானியர்
போற்றும் தங்கம
ஞான தங்கம். (நா)

எனை
யாண்டவன் கனவில நேரேதான்
அருளே புரிவாரே இதை
யாரறி வாரே. (நா)

நல்லோர் தம்மைக காணவும அன்பாய்
நயமாகச் சொலவார இது
எல்லாமே ஈசன அருள ஏவல பணிதானே
எணணும விஷயம யோகமே
எனனால வெளியாகுமே
ஏழை யென் ஊரோடு போ
யாறரிவாரே. (நா)

சீரும் செயலும வேண்டும
உயா சிபார்சுப பதவி வேண்டும்
பேரும் புகழும் வேண்டுவோரும்
பெரும் மகானகளும உண்டு
காரியமே ஜெயமே செய்யும்
ஸ்வாமி, தானதைக கணடும்
காலமதை வீணாக தவர விடாதே
இதை
யாரறிவாரே.................. .. .. .. .. ....(நா)

கோவப் பழம் போல் கணகள் முகத்தில்
　　கோபமும் குணமும் தோணும்
கொழுப்புள்ள வாய்ப பேசசு ஆனால சிறு
　　குழநதையின் இயல்பது காணும்
புருஷ லக்ஷணம் கொடுககும
பூமான் மீசையின் முறுககு
　　　　　　இநத
உருவத்தைப பாரு உதவியைக கூறு
உள்ளது நடக்கும் என்றே கடவுள்
சொல்லச் சொல்றாறு உம்மிடம
சொலலச் சொனனாறு................ (யா)

---

**இயற்றியது :—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
**சங்கீதம் :—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
**பாடியது :—ஸ்ரீமதி பானுமதி.**

**நடனம்.**

மதி மயஙகும் மலர் வதனம
மருவும் கண்கள் என்னை மயககுதே
இதழ் அமுதம் பருக உளளம்
எண்ணியே விம்மி விம்மித் துடிக்குதே
வாராய் என காதல் சுகுமாரனே ஒய்யாரமாக

　　　ரிண் டிண டா
　　　ரிண் டிண் டா
　　　ரிண் டிண் டா
　　　ரிண டிண் டா

லலலலா....லலலா....லலலலா....லலலல....

வசநத காலம் பார்
வனிதை என்னைப பார்
வாழ்வின் சுவையைப் பார
மலரில் வண்டைப் பார்

ஓ கலைமணி முறையொடு குடிகளைக
　　காப்பாற்றும் தொழிலாளி
ஓ வள நகர் அதிபதி கனமிகு
　　ஜனாதிபதி வாழி............

---

***இயற்றியது :***—ஸ்ரீ டி. கே. சுந்தரவாத்தியார்.
***சங்கீதம் :***—ஸ்ரீ ஸி. ஆர். சுப்பராமன்.
***பாடியது :***—"ராணி", "விஜயன்."

**ராணி :**
*கருகிப் புகையும் புகையே — என்*
*கணகளில நீா கலஙகச செயதனையே*
*கருகிப புகையும் புகையே — என்*
*கண்களில் நீர் கலங்கச் செய்தனையே*

*உருகியழுது கணணீர் உதிர்ப்பவள் நாளு*
*உருகியழுது கண்ணீர் உதிர்ப்பவள் நாளு*
*உன கைவரிசை இதுதானு*
*கருகிப் புகையும் புகையே — என்*
*கண்களில நீர் கலங்கச் செய்தனையே.*

**விஜே :**
*அன்பே உன் கண்களில கண்ணீர் ஏனே*
*அன்பே உன் கண்களில் கண்ணீர் ஏனே*
*சந்த்ர விம்ப முகம் கருக கண்டென் மனம் உருக*
*சந்த்ர விம்ப முகம் கருக கண்டென் மனம் உருக*
*அன்பே உன் கண்களில் கண்ணீர் ஏனே.*

**ராணி :**
*புகையால் வந்த கண்ணீரே*
*புகை போல் மாறிடும் நீயே பார்*
*புகையால் வந்த கணணீரே*
*புகை போல் மாறிடும் நீயே பார்*
*பகையும் மாயவே பூமியின் மேலே*
*பாலும் தேனும் போலவே*
*பகையும் மாயவே பூமியின மேலே*
*பாலும் தேனும் போலவே*
*புதுமை வாழ்விலே இனிதாகும்*
*சுகமே காண்போம் நாமே.*

**இருவரும் :**
*புதுமை வாழ்விலே இனிதாகும்*
*சுகமே காண்போம் நாமே.*

---

**ராணி :**
*ரெத்தம் சிந்தினுலும் — என்*
*சித்தம் நொந்து போகுமா*
*ரெததம் சிந்தினுலும் — என்*
*சித்தம் நொந்து போகுமா.*

*சுத்தம் செய்த பொன்னெளிதான்*
*சுட்டினும் மாறுமா*
*சுத்தம் செய்த பொன்னெளிதான்*
*சுட்டினும் மாறுமா.*

**விஜே :** தஙகக் காலில் சிநதுதே ரெததம்
கண்டு சகிப்பேனே
தஙகக் காலில் சிந்துதே ரெத்தம்
கண்டு சகிப்பேனே
அன்பின கனியே என்றல்
கண்டதிது தானே
அனபின கனியே எனறல
கண்டதிது தானே.

**ராணி :** இதயமிலலா கோடாலி
என்னைப் பதம பார்த்தது
இதயமிலலா கோடாலி
என்னைப பதம் பார்த்தது
இதய முள்ளோாகள் செய்யும்
இன்னல இல்லையானல்
இதய முளளோர்கள் செய்யும்
இன்னல இலலையானல்
இன்ப வாழ்வே கண்டு நாமே
என்றும் மகிழ்வோமே.

**இருவரும் :** இன்ப வாழ்வே கண்டு நாமே
என்றும் மகிழ்வோமே.

---

**ராணி :** காயை நறுக்கவும் தெரியலையே — யுத்த
களத்தில எனன செய்வாய்
காயை நறுக்கவும் தெரியலையே — யுத்த
களததில என்ன செய்வாய்.

**விஜே :** பாயும் புலிக்கு மரமேறத் தெரியுமோ
பரிகாசம் பண்ணுதே
பரிகாசம் பண்ணுதே.

**ராணி :** ஏ ! சிப்பாயே எழுந்து நிற்பாயே
கொஞ்சம சிரிப்பாயே. ஹி..ஹி..ஹி..ஹி..
என்று சிரிப்பாயே.... உ ஹூம்.. உ ஹூம்..
உ ஹூம்.. உ ஹூம்.
கொஞ்சம் சிரிப்பாயே
கொஞ்சம் சிரிபபாயே

**விஜே :** எப்போதும உனக்கென்ன அபலை — நெஞ்சில்
எனக்கன்றோ மிகுந்தது கவலை.

**ராணி :** கவலையைத் தீர்ப்பது காதலின் கலையே
கவலையைத் தீர்ப்பது காதலின கலையே
கலையின மகிமை கண்டால் கலங்குதல் இலலையே..

இருவரும் : இருவர் உடலும் உயிரும் ஒன்ருய்
இணைந்து நின்ற போது — இனி
என்றும் எதனாலும் நம்மைப் பிரித்திட
எவராலும் முடியாது....
நம்மைப பிரித்திட எவராலும் முடியாது.

---

***இயற்றியது*** **:—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
***சங்கீதம்*** **:—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
***பாடியது*** **:—ஸ்ரீமதி பானுமதி.**

உண்மை இல்லாத உலகிலே
உன்னை யறியா நிலையிலே
இன்னும் நீ ஏனோ வாழ்வதே............

1. கண போலும் காதல மாமலர்
கருகி உதிர்ந்து போனதே
அன்பே செய்தும பிழையானதே
எல்லாம் வீணாகிப் போனதே
ஆசை இனி ஏன் வாழ்விலே.

2. குளிர் வாடை வீசும வாழ்விலே
மகிழ்வோம் என்றெண்ணும் போதிலே
புயல வீசியே பாழானதே
புண்ணாகி மானம் போனதே
பூமியில ஏனோ வாழ்வதே....

3. எல்லாம் பொய்யென்று காதலன
பொலலாங் சொன்ன பின்னரும்
கலலோ உன் நெஞ்சம மானமே
இல்லாத நீச ஜென்மமோ
சொல்கிறேன் இன்றே மடிந்து போ.

---

***இயற்றியது*** **:—ஸ்ரீ. டீ. கே. சுந்தர வாத்தியார்.**
***சங்கீதம்*** **:—ஸ்ரீ. ஸி. ஆர். சுப்பராமன்.**
***பாடியது*** **:—ஸ்ரீமதி பானுமதி.**

சமயம் வாச்சுது சமயம் வாச்சுது
சமயம வாச்சுதய்யா — இந்த
சமயத்துககாயிரம சலாம் போடணும்
சமத்துககார ஐய்யா.

**பீமன் (வசனம்)** ஆயிரம் அல்ல ராணி...கோடி சலாம்
போடுகிறேன்...கோடி......

**ராணி :** இன்று முதல் உங்க விஷயத்தில
எண்ணத்தை வச்சியே போட்டேன்
விடவே மாட்டேன் சொல்லியும் போட்டேன்
முனபின் யோசனே செய்யாதீர் — ஒரு
முடிவு கட்டிப போட்டேன் — உமக்கொரு
முடிவு கட்டிப் போட்டேன — அதனலே
(சமயத்து).

**பீமன் : (வசனம்)** தெரியும ராணி...நீ ஒரு நல்ல முடிவு செய்வாய் என்று
நன்ருய்த தெரியும்... அதனலே ஓடோடியும் வநதேன்.

**ராணி :** பேரான உஙகளின வருகையே வருகையே
என் பேராசை நிறைவேறுமே — அது
மாருமலே எதிாபாராமலே — இட்டே
வந்திருக்குது யோகம் — உங்க
மனசு போலவே வாழப போகிறீா
அதிலெனன சந்தேகம், அதிலென்ன சநதேகம.

**பீமன் : (வசனம்)** ஆம்...ராணி மனசு போல வாழப போகி றேன இனறு.

**ராணி :** உமககும எனக்கும் மனசில இருக்கும்
உணமை வெளியாகும் — கண
இமைக்கும் பொழுதில் நடக்கப் போவதில்
எலலாம் சரியாகும.

பொறுஙக கொஞசம பொறுஙக
பொறுமையில பலன கிடைககுது
இருஙக கொஞசம் இருஙக — ஒரு
இனிய விஷயம இருககுது
யாருககும் அது கிட்டாது — உஙக
பேருககு எதும தட்டாது
அழகு நடையும் — அறிவும குணமும்
அடடா ! அருமை ! துரையே . . .

---

***இயற்றியது :***—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.
***சங்கீதம் :***—ஸ்ரீ. டீ. வி. டட்.
***பாடியது :***—மிஸ்டர் மோதி.

**தொகையரு.**

*நீதியில்லா உலகிலே நிம்மதியில்லா வாழவை*
*நினைதது என கலங்குகிருய்...*

**பாட்டு.**

வருந்துவதால பயனேது — உண்மை
தெரிநதிடுமா . . . . . . . . . .
கருகி உதிர்நததுன காதல பூவே
காட்டில காயநத நிலவு உன வாழவே
பருகும் நீரில்லாப பாழ் நதி போலே
பெருமையில்லாத பெண் ஜெனமமாணுய்.

வாழ்விலே அமைதி காணுவிடினும்
சாவதிலேனும காணபாய் . . வீணே (வருந்து)

---

**இயற்றியது :—ஸ்ரீ. கே. டீ. சந்தானம்.**
**சங்கீதம் :—ஸ்ரீ. டீ. ஸி. டட்.**
**பாடியது :—ஸ்ரீமதி ஜிக்கி, கோஷ்டி.**

இனி எனறும இன்பம்தான் இனபம்தான இன்பம்தான்
இன்பம்தான இன்பம்தானே . . . . . . . . . .
துன்பம யாவும தீர்ந்ததினுலே
ஆம தீர்நததினுலே

ஓ . . . . சுகமும நலமும் சேர்ந்ததினுலே
சேர்நததினுலே . . . .
வாழ்வில் இனிமேலே இன்பமதான இன்பம்தான்
இனபம் தான இனபம் தானே . . . . . .

ஓ காரிருள் நீங்கி சீருயிர் வானில்
. . . . . . . . . . சீருயிர் வானில்
தாரகை மினனுவதாலே
வெண் தாரகை மின்னுவதாலே

ஹா சோர்வும் துயரம் யாவும் மறைந்தே சுபமாய்
ஆனதினுலே

ஆம் சுபமாய் ஆனதினுலே
வாழ்வில் இனிமேலே இன்பம்தான் இன்பம்தான் இன்பம
தான் (இனி எனறும்)

---

Associated Printers (Madras) Ltd.


ஜூபிடர்
தயாரிப்பு
இன்ஸ்பெக்டர்
JUPITER PICTURES CIRCUIT